ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 442) May (1) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

‘ஸ்ரீ அஹோபில தாஸன்‘ க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 262)

காமதேனு முத்திரை

87-2. ப்ரஸ்ருதௌ த்வௌ கரௌ க்ருத்வா ஸ²ச்லிஷ்டௌ ச அபிதோமுகௌ
88. கநீயஸ்யௌ ததாங்குஷ்டௌ ஸ²ச்லிஷ்டௌ ச நியோஜ்ய ச
மத்யமாங்குலியுக்மம் ச அபி அந்யோந்ய கரப்ருஷ்டகம்
89. ப்ரக்ஷிப்யாநாமிகாயுக்மம் தர்ஜநீயுகலம் ததா
முத்ரைஷா காமதேந்வாக்யா ஸர்வேச்சா பரிபூரணீ

குறிப்பு – இது அனைத்து விருப்பங்களையும் பரிபூரணமாக நிறைவேற்றும் காமதேனு முத்திரை ஆகும்.

ஶ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஶ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 407)

6-3-5 கைதவம் செம்மை கருமை வெளுமையும் ஆய்
மெய் பொய் இளமை முதுமை புதுமை பழமையும் ஆய்
செய்த திண் மதிள் சூழ் திருவிண்ணகர் சேர்ந்த பிரான்
பெய்த காவு கண்டீர் பெரும் தேவு உடை மூவுலகே

பொருள் - தாழ்வை ஏற்படுத்தும் வஞ்சனையும், உயர்வை உண்டாக்கும் நேர்மையும்; இவற்றுக்கு ஒப்புமை கூறலாம்படி உள்ள கருமையும் வெண்மையும்; உயர்வும் தாழ்வுமாக உள்ள ஸத்யமும், அஸத்யமும்; இளமை மற்றும் முதுமை; புதுமை மற்றும் பழமை என்பதாக உள்ளவனும், நன்கு அமைக்கப்பட்ட மதிள் சூழ்ந்த திருவிண்ணகரில் உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரன் வைத்து வளர்க்கும் இந்தச் சோலைகளைக் காண்பீர்களாக; இவை அனைத்து தெய்வங்களையும் கொண்ட மூன்று லோகங்கள் ஆகும்.

அவதாரிகை - சிறியார் பெரியாரென்னாதே ஸர்வர்க்கும் ரக்ஷகன் திருவிண்ணகர் சேர்ந்த பிரானென்கிறார்.

விளக்கம் – "சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் என்ற பேதம் இன்றி அனைவருக்கும் ரக்ஷகன் யார் என்றால், திருவிண்ணகரில் உள்ள ஸர்வேச்வரன் ஆவான்", என்கிறார்.

வ்யாக்யானம் - (கைதவம் செம்மை) அநார்ஜவார்ஜவங்கள். (கருமை வெளுமை) கறுப்பு வெளுப்பு. (மெய் பொய்) ஸத்யாஸத்யம். (இளமை முதுமை) பால்ய வார்த்தகம். (புதுமை பழமை) அத்யதநமும், புராதனமும். (செய்தவித்யாதி) காலம் செல்லச்செய்தேயும் இப்போது செய்தாற் போலேயிருக்கிற தொழிற் புதுமையைச் சொல்லுகிறது. சிக்கெனவை உடைத்தான மதிளாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலே சேர்ந்த ஸர்வேச்வரன். (பெய்த காவு கண்டீர்) வைத்தாக்கின சோலைகிடீர். காவு சோலை. (பெருந்தேவுடை மூவுலகே) ஈச்வராபிமாநிகளான தேவர்களையுடைத்தான த்ரைலோக்யம். (மூவுலகு) மேலும் கீழும் நடுவும். இத்தால் சொல்லிற்றாயிற்றென் என்னில்? அச்சோலையானது தனக்கு வேண்டும் ரக்ஷையை யறிவிக்க மாட்டாதிறே; நின்றவிடத்தே நின்று வாடிக் காட்டுகையும், பின்பு வைத்தாக்கினவனே அதுக்கு வேண்டும் ரக்ஷை பண்ண வேண்டுகையும் இத்யாதிகளை யுடைத்தாகை; அப்படியே ஈச்வரேசிதவ்ய விபாகமற அவன் புத்த்யதீநமென்றபடி.

விளக்கம் - (கைதவம் செம்மை) - வஞ்சனை மற்றும் நேர்மை. (கருமை வெளுமை) - கருப்பு மற்றும் வெளுப்பு. (மெய் பொய்) - ஸத்யம் மற்றும் அஸத்யம். (இளமை முதுமை) - பால்யம் மற்றும் வயோதிகம். (புதுமை பழமை) - புதியதும் புராதனமும். (செய்த இத்யாதி) - காலம் கழிந்த பின்னரும், இப்போதுதான் செய்தது போன்று உள்ளதான தொழிலின் புதுமை கூறப்பட்டது. சீரிய முறையில் அமைக்கப்பட்ட மதிள்கள் சூழ்ந்த திருவிண்ணகரில் வந்த ஸர்வேச்வரன். (பெய்த இத்யாதி) - உண்டாக்கிய சோலை. காவு என்றால் சோலை. (பெருந்தேவுடை மூவுலகே) - ஈச்வரனை விரும்பி நிற்கும் தேவர்களைக் கொண்ட மூன்று லோகங்கள். (மூவுலகு) - மேலும் கீழும், நடுவும். இதன் மூலம் என்ன கூறப்பட்டது? அந்த மூன்று லோகங்கள் என்ற சோலையானது தனக்கு வேண்டிய பாதுகாப்பு என்ன என்று கூட அறியாமல் உள்ளவை ஆகும். நின்ற இடத்திலேயே நின்று சோலைகளை உண்டாக்கிக் காண்பித்து, பின்னர் அவற்றை உண்டாக்கிய அவனே அதற்கு வேண்டிய பாதுகாப்பையும் செய்தபடி உள்ள சோலைகள். இதன் மூலம் நியமிப்பவன் மற்றும் நியமிக்கப்படுபவை என்று வேறுபாடு இன்றி அனைத்தும் அவனுக்கு அடக்கி நிற்பது கூறப்பட்டது.

6-3-6. மூவுலகங்களும் ஆய் அல்லன் ஆய் உகப்பு ஆய் முனிவு ஆய்
பூவில் வாழ் மகள் ஆய்த் தவ்வை ஆய்ப் புகழ் ஆய்ப் பழி ஆய்
தேவர் மேவித் தொழும் திருவிண்ணகர் சேர்ந்த பிரான்
பாவியேன் மனத்தே உறைகின்ற பரஞ்சுடரே

பொருள் - ஸ்ருஷ்டிக்கப்பட்டது, கர்மவசப்பட்டது மற்றும் மூன்று குணங்களைக் கொண்டது என்பதால் மேன்மை ஏதும் அற்றதான மூன்று லோகங்களும்; இவற்றுக்கு நேர்மாறாக உள்ள நித்யவிபூதியைக் கொண்டவனும்; இப்படிப்பட்ட மேன்மை மற்றும் மேன்மையற்ற தன்மைகளைக் கொண்டதாக உள்ள விருப்பு மற்றும் வெறுப்புகளும்; தாமரையில் வசிக்கும் ஸ்ரீதேவியையும், ப்ரீதி அற்ற தன்மைக்கு ஏற்ற மூதேவியையும்; இவர்களுடைய விளைவாக முறையே உண்டாகும் புகழ் மற்றும் பழி; இப்படியாக உள்ள சேர்க்கையைக் கொண்டதால் காணப்படும் நீர்மை குணத்தை அனுபவிப்பதற்காக நித்யஸூரிகள் பொருந்தி நிற்கும் திருவிண்ணகரில் வந்து நிற்கும் ஸர்வேச்வரன், என் மீது விழுந்து நின்றாலும் பாபம் செய்தபடி உள்ள எனது மனதில் எப்போதும் வசித்தபடி நிற்பதால், ஒளி வீசியபடி உள்ளான்.

அவதாரிகை – “நானல்லேன்” என்னச் செய்தே தன் குணசேஷ்டிதங்களைக் காட்டி மறக்கவொண்ணாதபடி கலந்து அத்தாலே உஜ்ஜ்வலனாயிருக்கிறவன் திருவிண்ணகரிலே நின்றருளின ஸர்வேஸ்வரன் கிடீரென்கிறார்.

விளக்கம் – “பாபங்களை உடையவன் என்று நான் உள்ளபோதிலும் தனது திருக்கல்யாணகுணங்களுடைய செயல்களைக் காண்பித்து, என்னால் மறக்க இயலாதபடி என்னுடன் கலந்து, அதன் மூலம் ஒளிர்ந்தபடி உள்ள அவன், திருவிண்ணகரில் எழுந்தருளியுள்ள ஸர்வேச்வரன் ஆவான்”, என்கிறார்.

வ்யாக்யானம் - (மூவுலகங்களுமாய்) த்ரைலோக்யத்துக்கும் நிர்வாஹகனாய். க்ருதகம் அக்ருதகம் க்ருதகாக்ருதகமென்றும். (அல்லனாய்) அல்லாத உபரிதந லோகங்களுக்கும் நிர்வாஹகனாய். இவற்றைச் சொல்லி, அல்லனாயென்கையாலே இவ்வளவன்றிக்கே அஸாதாரணமான நித்யவிபூதியை யுடையனாயென்றும். (உகப்பாய் முனிவாய்) அநுக்ரஹ நிக்ரஹங்களாய். (பூவில் வாழ்மகளாய்த் தவ்வையாய்) ஸ்ரீயும் அஸ்ரீயுமாய். தவ்வை அஸ்ரீ. (புகழாய்ப் பழியாய்) ஸ்ரீயினுடைய கடாக்ஷமுடையார்க்கு வரும் புகழ். தவ்வையினுடைய கடாக்ஷமுடையார்க்கு வரும் பழி.

விளக்கம் – (மூவுலகங்களுமாய்) - மூன்று லோகங்களுக்கும் நிர்வாஹகன். அதாவது அவாந்தர ப்ரளயத்தில் அழிந்து ஸ்ருஷ்டி காலத்தில் படைக்கப்பட்ட கீழ் எழு, மேல் மூன்று லோகங்கள்; அவாந்தர ஸ்ருஷ்டியில் படைக்கப்படாத ஜன லோகம், தபோலோகம் மற்றும் ஸத்யலோகம்; மஹர் லோகம். (அல்லனாய்) – இவை அல்லாமல் உள்ள மற்ற லோகங்களுக்கு அதிபதியாக. அல்லது வேறுவிதமாகவும் கூறலாம்; இவை அனைத்தையும் கூறிய பின்னர் "அல்லன்" என்பதால், இவை மட்டும் அல்லாமல் அவனுக்கே உரிய நித்யவிபூதியைக் கொண்டவன் எனலாம். (உகப்பாய் முனிவாய்) - அனுக்ரஹம் மற்றும் அனுக்ரஹம் இல்லாத நிக்ரஹம். (பூவில் வாழ்மகளாய்த் தவ்வையாய்) – ஸ்ரீயும், அஸ்ரீயும். தவ்வை என்றால் அஸ்ரீ அல்லது மூதேவி. (புகழாய்ப் பழியாய்) - ஸ்ரீயின் கடாக்ஷம் உள்ளவர்களுக்கு ஏற்படும் புகழ், அஸ்ரீயின் கடாக்ஷம் உள்ளவர்களுக்கு உண்டாகும் பழி.

வ்யாக்யானம் - (தேவரித்யாதி) இந்த்ராதிகள் இங்குள்ளாருடைய ஹவிஸ்ஸு கொள்ளும்போது மூன்று யோஜநம் அவ்வருகே நின்று முகத்தைத் திரிய வைத்து வாங்கி சர்த்தி பண்ணியாயிற்றுப் போவது; அப்படியிருக்கிறவர்களுடைய கந்தமும் பொறுக்க மாட்டாத நித்யஸூரிகள், திருவிண்ணகர் பூமியிலேயாகையாலே இங்கே வந்து பொருந்தி வர்த்தியா நிற்பர்கள். அப்படிப்பட்ட திருவிண்ணகரிலே நித்யவாஸம் பண்ணுகிற உபகாரகன். (பாவியேன் மனத்தே) "மின்னிடை மடவா"ரில் அவன் மேல் விழத் தாம் இறாய்த்தபடியை நினைத்து, "பாவியேன்" என்கிறார், நித்ய்ஸூரிகள் தன் பக்கலிலே வந்து மேல் விழ, அத்தைத் தள்ளித் தான் என் பக்கலிலே வந்து மேல்விழா நிற்கக்கிடீர் நான் "அல்லேன்" என்றது. (மனத்தேயுறைகின்ற) இப்போது நித்யஸூரிகளும் அந்த இருப்புங் கிடக்கக் கிடீர் என்னெஞ்சிலே புகுந்து நித்யவாஸம் பண்ணி நின்றான். (பரஞ்சுடரே) தனக்குப் புறம்புண்டான வாஸ ஸ்த்தாநங்கள் கிடக்க, என்னெஞ்சிலே புகுந்து நின்றது எனக்குக் கார்யஞ் செய்தானாயிருக்கை யன்றிக்கே, "தன் பேறு" என்று தோற்றும்படி உஜ்ஜ்வலனானான். "மின்னிடை மடவா"ரில் "இவரையிழக்கிறோமோ?" என்று வந்த உறாவுதல் தீர, இவரைப் பெற்ற பின்பு அத்தாலே "நின்றிலங்கு முடியினாய்!" என்கிறபடியே வடிவிலே பிறந்த வேறுபாடு இருக்கிறபடி.

விளக்கம் - (தேவர் இத்யாதி) - இந்த்ரன் முதலான தேவர்கள், இந்தப் பூமிக்கு வந்து அவிர்பாகத்தைப் பெறும்போது பூமியைத் தொடராதபடி மூன்று யோஜனை தூரம் மேலே நின்றபடி, முகத்தைத் திருப்பி வைத்து வாங்கி, வாந்தி செய்து போவார்கள். அப்படிப்பட்ட இந்தப் பூமியின் வாசனை கூடப் படாதபடி உள்ள நித்யஸூரிகள், திருவிண்ணகர் என்பது இந்தப் பூமியில் உள்ளபோதிலும் இங்கு வந்து பொருந்தி நிற்பார்கள். அப்படிப்பட்ட திருவிண்ணகரில் எப்போதும் மகிழ்ந்தபடி உள்ள உபகாரகன். (பாவியேன் மனத்தே) - “மின்னிடை மடவார்” என்ற திருவாய்மொழியில் அவன் இவர் மீது வந்து விழுந்தபடி இருந்தான்; ஆயினும் தான் அதனை மறுத்ததை எண்ணியபடி “பாவியேன்” என்கிறார். நித்யஸூரிகள் அவன் மீது வந்து விழுந்தபடி உள்ளபோது, இவன் அவர்களைத் தள்ளிவிட்டு இவர் பக்கம் வந்து விழுந்தபடி இருந்தபோது, இவர் “அல்லன்” என்று அவனை விலக்கிவிட்டதைக் கூறுகிறார். (மனத்தே உறைகின்ற) - இப்போது நித்யஸூரிகளும், அவர்கள் இவ்விதம் சூழ்ந்தபடி உள்ள இருப்பும் திருவிண்ணகரில் உள்ளபோதிலும், அவன் என் மனதில் நீங்காதபடி வந்து நின்றான். (பரஞ்சுடரே) - தனக்காக ஸ்ரீவைகுண்டம் மட்டும் அல்லாமல், வசிக்கும் இடங்கள் பல உள்ளபோதிலும், எனது நெஞ்சில் வந்து புகுந்தான். இதன் மூலம் எனக்கு விருப்பமான கார்யத்தைச் செய்தான் என்று கூறலாம்படி இருந்தாலும், இது தன்னுடைய பேறு என்று எண்ணியபடி ஒளி வீசியபடி உள்ளான். “மின்னிடை மடவார்” என்னும் திருவாய்மொழியில் “நாம் இவரை இழக்கிறோமோ” என்று எண்ணத்தால் வந்த தவிப்பு நீங்கும்படியாக, இங்கு இவரைப் பெற்ற பின்னர், “நின்றிலங்கு முடியினாய்” என்பதற்கு ஏற்ப திருமேனியில் பிறந்த வேறுபாடு உள்ளது.

6-3-7. பரம் சுடர் உடம்பு ஆய் அழுக்குப் பதித்த உடம்பு ஆய்
கரந்தும் தோன்றியும் நின்றும் கைதவங்கள் செய்தும் விண்ணோர்
சிரங்களால் வணங்கும் திருவிண்ணகர் சேர்ந்த பிரான்
வரம் கொள் பாதம் அல்லால் இல்லை யாவர்க்கும் வன் சரணே

பொருள் – அடியார்களுக்கு அனுபவிப்பதற்கு ஏற்றதான இந்த ப்ரக்ருதியின் ஸம்பந்தம் இல்லாதபடியான திருமேனியைக் கொண்டவனாகவும், அடியார்கள் அல்லாதவர்கள் அனுபவிப்பதற்கு ஏற்றதான தாழ்ந்த ஜகத்தை தனது திருமேனியாகக் கொண்டவனாகவும்; அடியார்கள் அல்லாதவர்களுக்கு

ப்ரகாசிக்காமலும், அடியார்களுக்கு ப்ரகாசித்தபடியும்; ப்ரகாசிக்கும் விஷயத்தில் நிலையாக நின்றும், ப்ரகாசிக்காத விஷயத்தில் நிலையாக இல்லாமலும்; இப்படியாக உள்ளவன், நான்முகன் மற்றும் ருத்ரன் போன்றவர்கள் தங்கள் தங்கள் விருப்பங்கள் நிறைவேறும் பொருட்டு, தங்கள் தங்கள் தலைகள் கொண்டு வணங்கும் இடமான திருவிண்ணகரில் சேர்ந்த ஸர்வேச்வரன் ஆவான். அவனுடைய சிறந்த திருவடிகள் அல்லாமல், அனைத்து சேதநர்களுக்கும் அபயம் அளிக்கவல்ல புகலிடம் வேறு இல்லை.

அவதாரிகை - எத்தனையேனும் அளவுடையார்க்கும் வலிய புகல் அவனல்லதில்லை யென்கிறார்.

விளக்கம் – "எத்தனை ஞானம் கொண்டவர்களாக உள்ளபோதிலும் வலிமையான புகல் இடம் அவன் அல்லாமல் வேறு இல்லை", என்கிறார்.

வ்யாக்யானம் - (பரஞ்சுடருடம்பாய்) சுத்தஸத்த்வமயமான அஸாதாரண திவ்ய விக்ரஹத்தையுடையனாய். "தேஜஸாம் ராஸிமூர்ஜிதம்". (அழுக்குப் பதித்தவுடம்பாய்) குண த்ரயவச்யமான ஜகச்சரீரனாய். (கரந்தும்) இவற்றுக்கு அந்தராத்மாவாய்ப் புக்கு நிற்கச் செய்தே, "யமாத்மா ந வேத" என்று இவற்றுக்குத் தோன்றாத்படி நின்று, இவற்றின் ஸத்தையை நோக்கியும். (தோன்றியும்) "காணவாரா"யென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்திருப்பார்க்குக் காணலாம்படி ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணியும். (நின்றும்) நூறாண்டு பதினோராயிரமாண்டு நின்றும். அவ்விடங்களிலே, (கைதவங்கள் செய்தும்) க்ருத்ரிமங்களைப் பண்ணியும். அதாவது, அவதரித்து நிற்கச்செய்தே தன் படிகள் சிசுபாலாதிகளுக்குத் தோற்றாதபடி பண்ணியும், ஆச்ரிதர்க்குத் தோற்றும்படி பண்ணியும்.

விளக்கம் – (பரஞ்சுடர் உடம்பாய்) - சுத்தஸத்வமாக, அவனுக்கே உரியதாக உள்ள திவ்யமங்கள திருமேனியைக் கொண்டவன்; இதற்கு ப்ரமாணம் ஸ்ரீவிபு (1-9-67) - தேஜஸாம் ராஸிமூர்ஜிதம் - திருமேனியானது ஒளிக்கூட்டமாக உள்ளது - என்பதாகும். (அழுக்குப் பதித்தவுடம்பாய்) - மூன்று குணங்களின் வசப்பட்ட ஜகத்தைத் தனது திருமேனியாகக் கொண்டவன். (கரந்தும்) - இவற்றுக்கு அந்தராத்மாவாகப் புகுந்து நின்றபோதிலும், ப்ருஹத் உபநிஷத்தில் – யம் ஆத்மா

ந வேத - அந்த ஆத்மாவை அறிவதில்லை - என்பதற்கு ஏற்ப, இவற்றின் கண்களுக்குப் புலப்படாதபடி நின்று, இவற்றின் இருப்பை நோக்கியபடி உள்ளவன். (தோன்றியும்) - இவ்விதம் புலப்படாமல் உள்ளவன், அடியார்களுக்குப் புலப்படுவது ஏன் என்பதற்கு விடை தருகிறார்; திருவாய்மொழி (8-5-2) – காணவாராய் - என்று தளர்ந்தபடி உள்ளவர்களுக்குக் காணலாம்படி இராமன் மற்றும் க்ருஷ்ணன் போன்ற திருஅவதாரங்கள் செய்தபடியும். (நின்றும்) - நூறாண்டுகள், பதினோராயிரம் ஆண்டுகள் நின்றும். அந்தந்த இடங்களில் (கைதவங்கள் செய்தும்) - வஞ்சனைகள் நிறைந்த செயல்களைச் செய்தும். அதாவது இங்கு அவதரித்தபோதிலும், தனது திருமேனியின் விதங்கள் சிசுபாலன் போன்றவர்களுக்குப் புலப்படாமல் செய்தும், தந்து அடியார்களுக்குப் புலப்படும்படிச் செய்தும்.

வ்யாக்யானம் - (விண்ணோரித்யாதி) ப்ரஹ்மாதிகள் “தலை படைத்த ப்ரயோஜநம் பெற்றோம்” என்று வணங்கும்படி திருவிண்ணகரிலே நிற்கிற உபகாரகன். (வரங் கொள் பாதமல்லாலில்லை) எத்தனையேனும் தண்ணியாரும் கிட்டலாம்படி ச்ரேஷ்ட்டமான திருவடிகளல்லது. (யாவர்க்குமித்யாதி) எத்தனையேனும் கிழார்கிழார்க்கும் அதுவல்லது வலிய புகலில்லை. அவனையொழிந்த சரண்யரடங்கலும் இவனைக் கொண்டு முழுகும் பேர்; இவனைக் கொண்டு கரையேற்றவல்ல வலிய புகல் அவன் திருவடிகளல்லதில்லை. அடியே பிடித்து ஜீவிக்கில் ஜீவிக்குமத்தனை.

விளக்கம் - (விண்ணோர் இத்யாதி) – நான்முகன் போன்றவர்கள், “நாம் நமது தலை படைக்கப்பட்ட பலனை அடைந்தோம்” என்று வணங்கும்படியாக திருவிண்ணகரில் நின்ற உபகாரகன். (வரங் கொள் பாதமல்லாலில்லை) - எத்தனை இழிந்தவர்கள் என்றாலும் கூட, அண்டி நிற்கும்படியாக உயர்ந்து விளங்கும் திருவடிகளை அல்லாமல். (யாவர்க்கும் இத்யாதி) - எத்தனை கிழவர்களுக்கும், அவர்களைக் காட்டிலும் கிழவர்களுக்கும், அந்தத் திருவடிகள் அல்லாமல் புகலிடம் வேறு இல்லை. அவனைத் தவிர்த்த புகலிடமாக உள்ள அனைவருமே இவனைக் கொண்டு சரணம் புகும்படி உள்ளவன். இவனைக் கொண்டு கரையேற்றுவதற்கு வல்லதானது அவன் திருவடிகள் அல்லாமல், வேறு இல்லை. முதலிலேயே திருவடிகளைப் பிடித்துப் பிழைத்தல்.

6-3-8. வன்சரண் சுரர்க்கு ஆய் அசுரர்க்கு வெம் கூற்றமும் ஆய்
தன் சரண் நிழற் கீழ் உலகம் வைத்தும் வையாதும்
தென் சரண் திசைக்குத் திருவிண்ணகர் சேர்ந்த பிரான்
என் சரண் என் கண்ணன் என்னை ஆளுடை என் அப்பனே

பொருள் - தேவர்களுக்குச் சிறந்த புகலிடமாகவும், அஸுரர்களுக்குக் கொடிய யமனாகவும்; தனக்குச் சமமான வைபவங்களைக் கொண்ட லௌகிகர்களைத் தனது திருவடிகளுடைய நிழலில் வைத்தபடியும், அவ்விதம் அல்லாதவர்களை ஒதுக்கியபடியும்; இப்படியாக உள்ளவனும், தெற்குத்திசைக்கு புகலிடமாக உள்ள திருவிண்ணகரில் சேர்ந்தவனாக என்னை அடிமையாகக் கொண்ட எனது ஸ்வாமியும் ஆகிய அவன், அனைத்துவிதங்களிலும் எனக்கு புகலிடம் ஆவான்.

அவதாரிகை - எனக்குப் புகலான மாத்ரமன்றிக்கே மற்றுமெல்லாம் திருவிண்ணகர் சேர்ந்த பிரானென்கிறார்.

விளக்கம் – "எனக்குப் புகலிடம் மட்டும் என்று அல்லாமல் எனக்கு அனைத்துமாக உள்ளவன் திருவிண்ணகர் ஸர்வேச்வரன் ஆவான்", என்கிறார்.

வ்யாக்யானம் - (வன்சரண் சுரர்க்காய்) தேவர்களுக்காகத் தன்னை அம்புக்கு இலக்காக்கி அவர்களை நோக்கும் வலிய ரக்ஷகனாய். (அசுரர்க்கு வெங்கூற்றமுமாய்) ஆஸுர ப்ரக்ருதிகளுக்கு "அந்தகன் தண்ணீர்" என்னும்படி வெவ்விய கூற்றமுமாய். (தன் சரணித்யாதி) தன்னுடைய பாதச் சாயையுள்ளே, அநுகூலரான அர்ஜுநாதிகளையிட்டுக் கொண்டும், ஸம்பந்தமொத்திருக்கச் செய்தே, ப்ரதிகூலரான துர்யோதநாதிகளைப் புறம்பிட்டும். (தென் சரண் திசைக்கு) "தக்ஷிணாதிக் க்ருதா யேந சரண்யா புண்ய கர்மணா" என்கிறபடியே, "தென் திசைக்கு சரண்" தெற்குத் திக்குக்குப் புகலிடமான திருவிண்ணகரிலே கிட்டின உபகாரகன். (என் சரண்) எனக்குப் புகலிடம். (என் கண்ணன்) எனக்கு பவ்யனானவன். (என்னையாளுடை) என்னை யடிமை கொள்ள உரியவன். (என்னப்பன்) எனக்கு உபகாரகன். உலகமென்பது உயர்ந்தோர் மாட்டு.

விளக்கம் – (வன்சரண் சுரர்க்காய்) - தேவர்களுக்காகத் தன்னை அம்புகளுக்கு இலக்காக்கி நின்று, அவர்களைப் பாதுகாக்கும் வலிமையான காப்பவன்.

(அசுரர்க்கு வெங்கூற்றமுமாய்) - அசுரப் பிறவிகளுக்கு "யமன் கூட நல்லவன்" என்று கூறலாம்படி, கொடுமையான யமனாக உள்ளவன். (தன் சரணித்யாதி) - தனது திருவடிகளுடைய நிழலில் அநுகூலராக உள்ள அர்ஜுனன் போன்றவர்களைச் சேர்த்துக் கொண்டும், அர்ஜுனன் போன்றே உறவுமுறை கொண்டிருந்தாலும் ப்ரதிகூலராக உள்ள துரியோதனன் போன்றவர்களை வெளியேற்றியும். (தென் சரண் திசைக்கு) - ஆரண்யகாண்டம் (11-82) - தக்ஷிணாதிக் க்ருதா யேந சரண்யா புண்ய கர்மணா – புண்ணிய கர்மங்கள் கொண்ட அகஸ்தியரால் எந்தத் தெற்கு திசையானது புகலிடமாகச் செய்யப்பட்டதோ - என்பதற்கு ஏற்ப, தெற்குத்திசைக்குப் புகலிடமாக உள்ள திருவிண்ணகரை அடைந்த உபகாரகன். (என் சரண்) - எனக்குப் புகலிடம் ஆவான். (என் கண்ணன்) - எனக்கு வசப்பட்டவன். (என்னையாளுடை) - என்னை அடிமை கொள்வதற்கு உரியவன். (என் அப்பன்) - எனக்கு உபகாரகன்.

6-3-9. என் அப்பன் எனக்கு ஆய் இகுள் ஆய் என்னைப் பெற்றவள் ஆய்
பொன் அப்பன் மணி அப்பன் முத்து அப்பன் என் அப்பனும் ஆய்
மின்னப் பொன் மதிள் சூழ் திருவிண்ணகர் சேர்ந்த அப்பன்
தன் ஒப்பார் இல் அப்பன் தந்தனன் தன தாள் நிழலே

பொருள் - எனக்கு மட்டுமே உரியவனாகவும்; என்னுடைய இருப்பிற்கும் காரணமாக உள்ள தந்தையாகவும்; அத்தகைய ஆண்மைக்கு மாறான பெண்மைத்தன்மை கொண்ட செவிலித் தாயாகவும்; அவளைப் போன்று வளர்த்தல் மட்டும் அல்லாமல் என்னைப் பெற்ற நல்ல தாயாகவும்; பொன் போன்ற தனது விரும்பத்தக்க தன்மையை வெளிப்படுத்தியும், அதனைக் காட்டிலும் ஒளியாலும் மேன்மையாலும் வேறுபட்ட இரத்தினம் போன்று தனது தேஜஸ்ஸை வெளிப்படுத்தியும், அதனைக் காட்டிலும் நீர்மை மற்றும் குளிர்ச்சி ஆகியவற்றால் வேறுபட்ட முத்து போன்று தனது குளிர்ந்த நீர்மையை வெளிப்படுத்தியும்; இப்படியாக எனக்குப் பலவிதங்களில் உபகாரகனாகவும்; ஒளி வீசும்படி பொன்னால் ஆகிய மதிள்களால் சூழப்பட்ட திருவிண்ணகரில் வாழ்கின்ற ஸ்வாமியாகவும்; இப்படியாக தனது "அனைத்துவிதங்களிலும் உதவுபவன்" என்ற தன்மைக்கு வேறு யாரையும் ஒப்பு கூற இயலாதபடி உள்ள எனது தந்தை, தனது திருவடிகளின் நிழலை எனக்குத் தந்தருளினான்.

அவதாரிகை - எனக்கு சரணமான மாத்திரமல்ல, மற்றுமெல்லாம் அவனே யென்கிறார். எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் உபகாரகனாய், தன் பாதச்சாயையை, “அல்லேன்” என்ன, வலிய எனக்குத் தந்தானென்கிறார்.

விளக்கம் – “எனக்கு அடைக்கலமாக இருப்பவன் மட்டும் அல்ல, எனக்கு மற்ற அனைத்தும் அவனே”, என்கிறார். “எனக்கு அனைத்துவிதங்களிலும் உபகாரகனாகவும், ‘நான் தகுதி கொண்டவன் அல்லன்’ என்று நான் விலகினாலும் தனது திருவடிகளின் நிழலை வலிய வந்து எனக்கு அளித்தவன்”, என்கிறார்.

வ்யாக்யானம் - (என்னப்பனெனக்காய்) எனக்கு அஸாதாரணனாய் ஸத்தாஹேதுவாயுள்ள பிதாவாய். க்ஷாம காலத்திலே ப்ரஜையை விற்றுண்ணும் தமப்பனைப் போலன்றியே, தன்னையழிய மாறியும் என்னை நோக்கக் கடவ பிதாவாய். (இகுளாய்) இகுளையென்று தோழிக்குப் பேராய், அத்தைக் குறைத்து, இகுளென்று கிடக்கிறது. இத்தால் சொல்லிற்றாயிற்று, எனக்கு வ்ருத்த கீர்த்தநம் பண்ணுகைக்குத் தோழியுமாய். (என்னைப் பெற்றவளாய்) வளர்த்துக் கொள்ளியான தாயைப் போலன்றியே, பத்து மாஸம் வயிற்றிலே வைத்து நோக்கிப் பெற்ற தாயாய்.

விளக்கம் – (என் அப்பன் எனக்காய்) - எனக்கு மட்டுமே உரியவனாகவும், எனது இருப்பிற்குக் காரணமாக உள்ள தந்தையாகவும், பஞ்சம் ஏற்படும் காலத்தில் பிள்ளைகளை விற்று உணவு உண்ணும் தந்தை போன்று அல்லாமல், தன்னை அழித்துக் கொண்டு என்னைக் காப்பாற்றும் தந்தை. (இகுளாய்) - இகுள் என்றால் தோழி என்று தமிழர்கள் கூறுவர். எனக்கு, நடக்கின்ற செயல்கள் அனைத்தையும் உரைக்கவல்ல தோழியாக உள்ளவன். அல்லது எனது தாய் போன்று எனக்குத் தோழியாகவும் உள்ளவன். (என்னைப் பெற்றவளாய்) – வளர்த்த பின்னர் அகலும் செவிலித்தாய் போன்று அல்லாமல் பத்து மாதம் வயிற்றில் வைத்து நோக்கிப் பெற்ற தாய்.

வ்யாக்யானம் - (பொன்னப்பனித்யாதி) வேறே போக்யமாய்க் கொண்டு உபகாரகமாவன சில வஸ்துக்களுள; எனக்கு அவ்வோ முகங்களெல்லாம் தானாய் நின்று உபகரித்தவன். “பொன்னும் மணியும் முத்தும் போலே எனக்கு உபகாரகன்.

(மின்னப் பொன்னித்யாதி) மின்னா நின்றுள்ள பொன்மதிளாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலே நின்ற உபகாரகன். (தன்னொப்பாரில்லப்பன்) சிலர்க்கு ஒன்றை உபகரிக்குமிடத்தில், தன்னோடொக்க உபகரிக்கவல்லார் இல்லாதபடியான மஹோபகாரகன். இதுக்குச் சீயரருளிச்செய்யும்படி; "மின்னிடை மடவாரிலே அவன் வந்து மேல் விழ, 'நீ எனக்கு வேண்டா' என்று நான் தள்ளத் தள்ள; நீ உனக்கு ஹிதமறிந்தாயோ? நான் உனக்கு வேணுங்காண் என்று தன்னையெனக்குத் தந்தவன்" என்று. (தந்தனன் தனதாள் நிழலே) "உன்னையொழிந்த வெய்யிலே யெனக்கமையும்" என்று நான் அகலப் புக, "அழித்தாயுன் திருவடியால்" என்று தன்னுடைய திருவடிகளாலே என் மமதையைப் போக்கி, பாதச்சாயையை எனக்குத் தந்தான். அடிபட்டவாறே, "எனக்கு" என்று வைத்தவற்றையும் பொகடுவர்களே.

விளக்கம் - (பொன்னப்பன் இத்யாதி) - இனிமையாக இருப்பதால் உபகாரம் செய்வதாகவும் வேறு சில பொருள்கள் உள்ளன. அப்படிப்பட்ட ஒவ்வொரு பொருளும் தானாகவே என நின்று எனக்கு உபகாரம் செய்பவன். பொன்னும், மணியும், முத்தும் போன்று எனக்கு உதவி செய்பவன். (மின்னப் பொன் இத்யாதி) - ஒளிர்ந்தபடி உள்ள பொன் மதிள்களால் சூழப்பட்ட திருவிண்ணகரில் நிற்கும் உபகாரகன். (தன் ஒப்பார் இல்லப்பன்) - ஒரு சிலர், ஒரு சிலருக்குப் பொருள்கள் அளித்து உதவும்போது தங்களுக்கு மேல் இவ்விதம் உதவுபவர்கள் இல்லை என்று கூறலாம்படி உதவுவார்கள். அது போன்று உதவும் மஹா உபகாரகன். மற்றவர்களைக் காட்டிலும் இவன் செய்த உபகாரம் என்பதற்கு நஞ்சீயர் கூறும் விளக்கம்: "மின்னிடை மடவார்" என்ற திருவாய்மொழியில் அவன் வந்து மேலே விழுந்தான்; "நீ எனக்கு வேண்டாம்" என்று நான் தள்ளினேன், அப்போது அவன் "உனக்கு வேண்டிய நன்மையை நீ அறிவாயோ? நான் உனக்கு வேண்டும் என்று அறிவாயாக" என்று கூறி தன்னை எனக்குத் தந்தவன்; இது அவன் மறறவர்கள் போன்று அல்லாமல் செய்த பெரும் உதவியாகிறது. (தந்தனன் தனதாள் நிழலே) - "தந்தனன்" என்று கூறுவதால் "வலிய வந்து அளித்தான்" என்றாகிறது. நிழல் என்று கூறுவதால், "உன்னைத் தவிர உள்ள வெயில் எனக்கு ஏற்றதே" என்று எண்ணி அகல முயன்றேன்; அப்போது, "அழித்தாய் உன் திருவடியால்" என்று தன்னுடைய திருவடிகளால் எனது மமதையை நீக்கி, தனது திருவடிகளின் நிழலை எனக்கு அளித்தான். "அடிபட்டவாறு" என்பதற்குத் திருவடிகள் மற்றும் தண்டனை என்று

இரண்டு பொருள்கள் உண்டு; அவ்விதம் அடிபட்டவுடன் “எனக்கு” என்று வைத்துக் கொண்டதையும் விடுவார்கள் அல்லவோ?

6-3-10. நிழல் வெய்யில் சிறுமை பெருமை குறுமை நெடுமையும் ஆய்
சுழல்வன நிற்பன மற்றும் ஆய் அவை அல்லனும் ஆய்
மழலை வாய் வண்டு வாழ் திருவிண்ணகர் மன்னு பிரான்
கழல்கள் அன்றி மற்றோர் களைகண் இலம் காண்மின்களே

பொருள் - வெப்பத்தின் துயரத்திற்கு சாந்தி அளிக்கும் நிழலும், துயரத்தை அளிக்கும் வெப்பமும்; சிறியதாக இருத்தல் என்பதன் எல்லையாக உள்ள அணுத்தன்மையும், பெரியதாக இருத்தல் என்பதன் எல்லையான மஹத்தன்மையும்; இவை இரண்டின் நடு அளவு கொண்டதான குறுமையும் நீட்சியும்; அடைந்தபடி உள்ளவை மற்றும் அடையாதபடி உள்ளவையும்; மற்றும் உள்ள பல வஸ்துக்களாகவும், அந்த வஸ்துக்களாக இல்லாதவனும்; இசைத்தபடி உள்ள வண்டுகள் இன்பமாக வாழ்கின்ற திருவிண்ணகரில் எப்போதும் வசிப்பவனும் ஆகிய ஸர்வேச்வரனுடைய திருவடிகள் அல்லாமல், காப்பாற்றும் வஸ்து வேறு எதனையும் நாம் கொண்டவர்கள் அல்லர். இதனை நீங்களே காணலாம்.

அவதாரிகை - அவன் திருவடிகளல்லது மற்று ரக்ஷகமில்லை யென்னுமிடத்தை புத்தி பண்ணுங்கோ ளென்கிறார்.

விளக்கம் – “அவன் திருவடிகள் அல்லாமல் காப்பாற்றும் வஸ்து வேறு ஏதும் இல்லை என்பதை உங்கள் புத்தியில் கொள்வீர்களாக”, என்கிறார்.

வ்யாக்யானம் - (நிழல் வெய்யில்) சீத ஹேதுவான நிழலும், உஷ்ண ஹேதுவான வெய்யிலும், (சிறுமை பெருமை) அணுத்வ மஹத்த்வங்கள். (குறுமை நெடுமை) மத்யம பரிமாணத்திலுண்டான ஹ்ரஸ்வ தீர்க்கங்கள். (சுழல்வன நிற்பன) ஜங்கம ஸ்த்தாவரங்கள். (மற்றுமாய்) அநுக்த ஸமுச்சயம்; சொல்லப்படாததெல்லாமாய். (அவையல்லனுமாய்) அவற்றுக்கு அந்தர்யாமியாய் நிற்கச் செய்தே அவற்றின் தோஷம் தட்டாதபடி நிற்குமென்று கீழே சொல்லிற்றிறே; இனியிங்கு என்? என்னில், அவற்றுக்கு வரும் அவஸ்த்தைகளையுமுடையனல்லனாய் என்றபடி.

அவையாவன சேதநகதமாயுள்ள ஸுகித்வ துக்கித்வாதிகளும், அசேதநகதமான பரிணாமாதிகளும்.

விளக்கம் – (நிழல் வெய்யில்) - குளிர்ச்சிக்குக் காரணமாக்ன நிழலும், வெப்பத்திற்குக் காரணமான வெய்யிலும். (சிறுமை பெருமை) - அணுவாக உள்ள தன்மையும், மஹத் தன்மையும். (குறுமை நெடுமை) – சிறியதும் இன்றி, பெரியதும் இன்றி, நடுவில் உள்ளதான குறுகுதல் மற்றும் நீளுதல். (சுழல்வன நிற்பன) - விலங்குகளும் தாவரங்களும். (மற்றுமாய்) - கூறப்படாத அனைத்தும். அதாவது இங்கு சொல்லப்படாத மற்ற அனைத்தும். (அவையல்லனுமாய்) - அவற்றுக்கு அந்தர்யாமியாக உள்ளபோதிலும் அவற்றின் தோஷம் தனக்கு ஏற்படாதபடி உள்ள தன்மையை முன்பு கூறினார். இங்கு, அவற்றுக்கு ஏற்படும் பலவேறு நிலைகளை தான் அடையாமல் இருத்தல் என்பது கூறப்பட்டது. அவை என்ன? சேதநர்களிடம் உண்டாகும் சுக துக்கங்கள் மற்றும் அசேதநங்களிடம் ஏற்படும் வளர்தல் போன்ற மாற்றங்கள்.

வ்யாக்யானம் - (மழலை வாய் வண்டு வாழ்) பருவத்தில் இளமையாலே இனிய பேச்சுக்களையுடைத்தான வண்டுகள் வர்த்தியா நின்றுள்ள திருவிண்ணகரிலே நித்யவாஸம் பண்ணுகிற உபகாரகன் திருவடிகளையொழிய வேறு ரக்ஷகரை யுடையோமல்லோம். (கழல்களன்றி மற்றோர் களைகணிலம்) "மாமேகம் சரணம் வ்ரஜ" என்னுமவனன்றிக்கே திருவடிகள் தானே தஞ்சமென்கை. (காண்மின்களே) இது அர்த்தவாதஞ் சொல்லுகிறேனன்று; நீங்களும் பாருங்கோள்.

விளக்கம் – (மழலை வாய் வண்டு வாழ்) - பருவத்தின் இளமை காரணமாக இனிமையான சொற்களையும் பேச்சுக்களையும் கொண்ட வண்டுகள் வசித்தபடி உள்ள திருவிண்ணகரில் எப்போதும் வசித்தபடி உள்ள ஸர்வேச்வரனுடைய திருவடிகள் அல்லாமல் நம்மைக் காப்பாற்றவல்லவர்கள் வேறு யாரையும் நாம் கொள்ளவில்லை. (கழல்களன்றி மற்றோர் களைகணிலம்) - கீதை (18-66) – மாம் ஏகம் சரணம் வ்ரஜ – என் ஒருவனை மட்டுமே சரணம் புகுவாயாக - என்று கூறும் அவன் அல்லாமல், அவனுடைய திருவடிகளே தஞ்சம் என்கிறார். (காண்மின்களே) - இவற்றை நான் புகழ்வதற்காகக் கூறவில்லை. நீங்களே நோக்குங்கள்.

6-3-11. காண்மின்கள் உலகீர் என்று கண் முகப்பே நிமிர்ந்த
தாள் இணையன் தன்னைக் குருகூர்ச் சடகோபன் சொன்ன
ஆணை ஆயிரத்துத் திருவிண்ணகர்ப் பத்தும் வல்லார்
கோணை இன்றி விண்ணோர்க்கு என்றும் ஆவர் குரவர்களே

பொருள் - "இந்த உலகத்தில் உள்ளவர்களே! இதனைக் காண்பீர்களாக!", என்று தன்னைப் போன்றே அவனிடம் பக்தி வளர்ந்தபடி உள்ளவர்களிடம், கண் முன்பாக ஓங்கி வளர்ந்த திருவடிகளைக் கொண்ட ஸர்வேச்வரனைக் குறித்து, ஆழ்வார்திருநகரியின் நிர்வாஹகரான நம்மாழ்வார் அருளிச்செய்ததும், பகவானுடைய ஆணை ரூபமாக உள்ளவையும் ஆகிய ஆயிரம் பாசுரங்களில், திருவிண்ணகர் விஷயமாக உள்ள இந்தப் பத்துப் பாசுரங்களையும் கற்க வல்லார்கள், எந்தவிதமான தோஷமும் இன்றி நித்யஸூரிகளால் எப்போது கௌரவிக்கத்தக்கவர்கள் ஆவர்.

அவதாரிகை – நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லார் நித்யஸூரிகளுக்கு நாள்தோறும் கௌரவ்யராவரென்கிறார்.

விளக்கம் – "இந்தத் திருவாய்மொழியைக் கற்றவர்கள் நித்யஸூரிகளால் கௌரவிக்கப்படுவார்கள்", என்கிறார்.

வ்யாக்யானம் - (காண்மின்களுலகீரென்று கண் முகப்பே நிமிர்ந்த தாளிணையன் தன்னை) "உங்கள் தலையிலே நான் காலை வைக்கக் கொடுவாருங்கோள்" என்றால் இசையாரென்று பார்த்து, நான் காட்டப் புகுகிறதொரு விஸ்மயம் பாருங்கோள் என்பாரைப்போலே, இவர்கள் கண்முகப்பே திருவடித் தாமரைகளையுடையவனை. (காண்மின்கள்) இதொரு விஸ்மயம் என்ன வேண்டிற்றுக் காணும், "தலையிலேயடிபடப் புக்கவாறே இறாய்ப்பர்கள்" என்று. (குருகூர்ச் சடகோபன் சொன்ன) இந்த ஸௌலப்யத்தை யநுபவித்தவர் சொன்ன வார்த்தையாகையாலே ஆப்தமென்கை.

விளக்கம் – (காண்மின்கள் உலகீர் என்று கண் முகப்பே நிமிர்ந்த தாள் இணையன் தன்னை) – "உங்கள் தலைகளில் நான் எனது திருவடிகளை வைக்கப்போகிறேன். ஆகவே வாருங்கள்", என்று கூறினால் சம்மதிக்கமாட்டார்கள் என்று உணர்ந்தவனாக, "நான் காண்பிக்கப்போகும் ஒரு ஆச்சர்யத்தைக் காண்பீர்களாக",

என்று கூறுபவர்கள் போன்று, இவர்கள் கண் முன்பாகவே ஓங்கி உயரமாக வளர்ந்த திருவடித்தாமரைகளைக் கொண்டவனை. (காண்மின்கள்) - இதில் வியப்பு என்ன உள்ளது! இங்கு உள்ள அனைவரும் தங்கல் தலைகளில் திருவடிகள் வந்தாலும் மறுத்து நிற்பவர்களாகவே இருப்பர். (குருகூர்ச் சடகோபன் சொன்ன) - இத்தகைய ஸௌலப்ய தன்மையை நன்றாக அனுபவித்தவருடைய சொற்கள் என்பதால், நம்பத்தக்கவர் கூறிய சொற்கள் என்றாகிறது.

வ்யாக்யானம் - (ஆணையாயிரத்து) ஈச்வரனுடைய ஜகதநுசாஸநத்தைச் சொன்ன இத்திருவாய்மொழிவல்லார். விண்ணோருண்டு நித்யஸூரிகள், அவர்களுக்கு காலதத்த்வமுள்ளதனையும், குருக்களாவர் கௌரவ்யராவர். இதில், கோணையில்லை ஒரு மிறுக்கில்லை. ஆவதென்? அஸ்ப்ருஷ்ட தோஷ கந்தரான நித்யஸூரிகளுக்கு, நித்ய ஸம்ஸாரியானவன் இத்தைக் கற்குங் காட்டில் கௌரவ்யனாம்படி யெங்ஙனே? என்னில், அங்கேயிருந்து வைத்தே ததீயத்வாகாரத்தாலே லீலாவிபூத்யநுஸந்தாநம் பண்ணி ஹ்ருஷ்டராம் நிலையுள்ளது முக்தர்க்காகையாலே, இங்கேயிருந்தே அவர்கள் அநுஸந்தாநத்தைப் பண்ணுகிற இவனை, “ஸம்ஸாரத்தேயிருந்து வைத்தே நம்படி யொருவனுக்கு உண்டாவதே!” என்று கொண்டாடியிருப்பர்கள்.

விளக்கம் – (ஆணை ஆயிரத்து) - ஈச்வரனுடைய இந்த ஜகத்தை நியமிக்கும் சாஸநத்தைக் கூறுகிற இந்தத் திருவாய்மொழியில் வல்லவர்கள். “ஆணை விண்ணகர் பத்து” என்று வரிசைப்படுத்த வேண்டும். “விண்ணோர் உண்டு” என்பது நித்யஸூரிகள். அவர்களால் காலம் என்ற தத்வம் உள்ளவரை. குருக்கள் - கௌரவிக்கத்தக்கவர்கள் ஆவர். இதில் சோணை இல்லை - ஒரு மிறுக்கு இல்லை; அதாவது பொருந்தாமை இல்லை. எப்படி? ஸம்ஸார ஸம்பந்தம் இல்லாத நித்யஸூரிகளுக்கு, நித்யஸம்ஸாரியாக உள்ள ஒருவன், இந்தத் திருவாய்மொழி கற்பதன் மூலம், கௌரவிக்கத்தக்கவன் என்றாவது எப்படி? முக்தர்கள் பரமபதத்தில் உள்ளபோதிலும், “பகவானின் அடியார்களுக்கு அடியார்கள்” என்பதன் காரணமாக, இந்தப் பூமியையே எண்ணியவர்களாக சந்தோஷம் அடையும் நிலை உள்ளது. இவ்விதம் உள்ளபோது இங்கு உள்ளவர்கள் இது போன்று “அடியார்க்கு அடியார்” என்று கொண்டாடும்படியாக உள்ள இவனை “இவன் ஸம்ஸாரத்தில் உள்ளபோதிலும் இவனை, நம்மைக் கொண்டாடுவது

போன்று கொண்டாடுகிறார்களே” என்று வியந்து, நித்யஸூரிகளும் இவனைக் கொண்டாடியபடி இருப்பர்.

திருவாய்மொழி ஆறாம் பத்து மூன்றாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்